# ஸ்ரீ மஹாபாரதம்.

## பீஷ்மபர்வம் 165

திரிசிரபுரம்

ஸெண்ட் ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்க்ருத தலைமைப்பண்டிதர்,

மஹாவித்வான், ஸாரஸ்வதஸாரஜ்ஞர், கவிசிகாமணி,

ஸ்ரீ-உ-வே-T. V. ஸ்ரீநிவாஸாசார்யர்

அவர்களால்

மொழிபெயர்க்கப்பெற்று,

ஆண்டிப்பட்டி ஜமீன்தார்,

ஸ்ரீமான்,

S. Rm. M Ct. பெத்தாச்சிசெட்டியார், M. R. A. S.

அவர்களின் பேருதவியைக்கொண்டு

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

**ம. வீ. இராமாநுஜாசாரியரால்**

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா. ஈ: தபால்சார்ஜ் அணா ௩.

1919.

*(All Rights Reserved.)*

ஸ்ரீ:

# முகவுரை.

ஸ்ரீ மஹாபாரதத்துள்சிறந்தபாகமாகிய பீஷ்மபர்வம் பூர்த்தியான
விஷயம் நமது ஆப்தர்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை விளைவிக்கு
மென்பதில் சந்தேகமில்லை. மொழிபெயர்ப்பு முழுதும் சிலவருஷங்க
ளுக்குமுன் பூர்த்தியாகி ஸித்தமாகஇருந்தமையால், இது முன்னமே
வெளிவந்திருக்கவேண்டுமாயினும் ஐரோப்பியமஹாயுத்தநிகழ்ச்சி
காரணமாகநேர்ந்த பலஅசௌகரியங்களால் அப்போதேவெளிப்
படுத்தமுடியாமல்நின்றது. தொடங்கியநற்காரியத்திலுள்ள ஊக்கமும்
அது நடைபெறவில்லையேஎன்கிற ஏக்கமும் என்மனத்தில் வேரூன்றி
நாளுக்குநாள் வளர்ந்துகொண்டேவந்தன. எப்படியும் நற்காலம்
வாய்க்குமென்று எல்லாம்வல்ல ஸர்வேச்வரனது திருவடிகளையே
பற்றாகக்கொண்டு கவலைக்கடலில் நீந்திக்கொண்டிருந்தேன். அவனு
டைய பரமகருணையால் இந்தப் பீஷ்மபர்வம் பூர்த்தியாகிவெளிவந்த
தில் எனக்குண்டாயிருக்கிறபெருங்களிப்புக்கு ஓர் அளவின்று.

இந்தப்பீஷ்மபர்வம் ஸ்ரீமஹாபாரதத்தினுள் மிக்கபெருமைவாய்ந்
தது. இது, வேதத்துக்குஉபநிஷத்துக்கள்போல மஹாபாரதமாகிய
ஐந்தாம்வேதத்துக்கு ஸ்ரீபகவத்கீதையாகியஉபநிஷத்தைத் தன்னகத்
துடையது. பகவத்கீதையின்பெருமை உலகமெல்லாம் பரவி நிலவு
கிறது. அதன்சொற்பொருட்சிறப்புக்களைப் பார்த்துப்பார்த்து எத்
தேசத்தினரும் எச்சமயத்தினரும் வியப்படைகின்றனர். அதற்கு
உலகத்திலுள்ள பற்பலபாஷைகளிலும் பற்பலமொழிபெயர்ப்புக்கள்
இருத்தலே அதன்பெருமையை நன்குவிளக்கும். முற்றறிவனான
ஸர்வேச்வரனது திருவாக்கினால் பரமஆப்தனான அருச்சுனனுக்
குப் பெருங்கருணையுடன் சொல்லப்பட்டதென்றால், இதன்பெருமை
யைச் சொல்லவும்வேண்டுமோ? பாண்டவகௌரவர்களுக்குப் பிதா
மஹரும் பாரதர்களுக்கு நடுநாயகமணிபோன்றவரும் பேரறிவாளரும்
தெய்வத்தன்மையுள்ளவரும் யாராலும்செய்தற்கரிய பெரியவிரதத்
தைமேற்கொண்டு முற்றப்பெறச்செய்தவருமான பீஷ்மரது ப்ர
பாவத்தை முக்கியமாகக்கொண்டதென்பதிலும் வேறுசிறப்பு என்ன
இருக்கிறது? பக்தபராதீனனான பகவான் தான்செய்தப்ரதிஜ்ஞை

தவறினும் அடியார்செய்தபிரதிஜ்ஞை தவறலாகாதென்று ஆஶ்ரித வாத்ஸல்யத்தை அநுஷ்டித்துக்காட்டி, ‘அச்சுதன்’ என்னும் தன் திருநாமத்தைநிலைநிறுத்திக்கொண்டதும் இந்தப்பருவத்திலன்றோ?

திரிசிரபுரம் ஸெண்ட்ஜோஸப்காலேஜ் ஸம்ஸ்க்ருததலைமைப்பண்டிதர் மஹாவித்வான் கவிசிகாமணி ஸாரஸ்வதஸாரஜ்ஞர் ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் இந்தப் பீஷ்மபர்வத்தையும் மற்ற யுத்தபர்வங்களையும், என்வேண்டுகோளுக்கிணங்கி மொழிபெயர்த்துதவினார்கள். இவர்களுடைய பாஷாஞானமும் சாஸ்திர பரிஶ்ரமமும் யாவராலும் கொண்டாடத்தக்கன. இவர்களுடைய உழைப்பின்பயனாகவெளிவந்த ஹம்ஸஸந்தேசமுதலிய அரிய நூல்களால் இவர்களுடைய கவித்திறமையும் இம்மொழிபெயர்ப்பால் கல்விவன்மையும நன்குவிளங்கும். ஸ்ரீ அகோபிலமடத்தில், ஸ்ரீ அழகியசிங்கர்ஸந்நிதியில் மஹாவித்வான்கள் பலர்கூடிய மஹாஸதஸில் இந்தஸ்வாமியினுடைய கல்விவன்மையையுங் கவித்திறமையையும் பாராட்டிக் கவிசிகாமணியென்னும் பட்டத்தை அளித்தார்களென்றால், இவர்களுடைய பெருமையைச்சொல்லவும் வேண்டுமோ? மஹாபாரதமொழிபெயர்ப்புவேலையை ஏற்றுக்கொண்டது முதல் இவர்கள் சிறிதும் ஶ்ரமம்பாராட்டாமல் விரைவில் மிக்க ஊக்கத்துடன் நிறைவேற்றித்தந்த உதவியை நான் என்றும்மறவேன்.

இத்துணைச்சிறப்புவாய்ந்தஇந்தப்பருவம் அச்சிட்டு வெளியிடுதற்கு வேண்டிய பொருளுதவிசெய்து ஆதரித்த பரமோபகாரிகள், ஆண்டிப்பட்டிஜமீன்தாரும் மதுரைத்தமிழ்ச்சங்கத்து உபஅக்ராஸநாதிபதியுமாகிய ஸ்ரீமான், S. Rm. M. Ct. பெத்தாச்சிசெட்டியார் M. R. A. S., அவர்கள். இவ்வள்ளற் பெருந்தகையாருடைய கொடைச் சிறப்பை என்னவென்று புகழ்வது! இவர்கள்உபகரித்தமாதிரி மிகப் பாராட்டற்பாலது. முந்தியபழக் கமில்லாமலும் இன்னது செய்ய வேண்டுமென்று நான்வற்புறுத்திக்கேளாமலும் பிறருடைய நிர்ப்பந்தங்களில்லாமலும் வேறுபயனை எதிர்பாராமலும் அவர்கள் காலத்திற் செய்தபேருதவி பனைத்துணைக்கும்அளவினதன்று. யாசிக்கும் துன்பத்தைநான் அடையாமல் இவர்கள்கொடுத்ததன்சிறப்பை நினைக்குங் கால என்மனம் மகிழ்வுறுகிறது.

“கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று,
இரப்புமோர் ஏஎருடைத்து”

என்னும் பொய்யாமொழியின் பொருளை இவர்களிடத்து உண்மையாகக்கண்டேன். கல்விவளர்ச்சியில்பேரூக்கம்கொண்டவர்களும் புல

வர்களுக்கு எய்ப்பினில்வைப்புமாகிய ஸ்ரீமான்செட்டியாரவர்களுக்கு ஆயுள் ஆரோக்கியமுதலிய எல்லாநன்மைகளையும் மேன்மேலும் பொழிந்தருளும்படி எல்லாம்வல்ல இறைவனை எப்பொழுதும் பிரார்த்தித்தலின்றி யான்செய்யும் கைம்மாறு யாதுளது ?

ஸ்ரீபகவத்கீதையை மதத்ரயபாஷ்யங்களுடன்மொழிபெயர்த்து வெளியிடுவதாக நிச்சயித்திருந்தேன். பகவத்கீதைக்கு அந்தஅந்த மதச்சார்பாக அநேகமொழிபெயர்ப்புக்களிருக்கலாலும் வேறுசிலகாரணங்களாலும் அதனை இப்பொழுதுசெய்யாமல் நிறுத்திக்கொண்டேன். கீதையின்மொழிபெயர்ப்பு மஹாபாரதத்தின் மற்றப்பகுதிகளைப்போலவே ஒருமதச்சார்பாகஇராமல் பொதுவாகஇருக்கவேண்டுமென்பதே எனதுவிருப்பம் ஆயினும் வேதாந்தபாகங்கள்வரும்பொழுது அங்ஙனம்செய்தல் சாத்தியப்படவில்லை. மொழிபெயர்ப்பவர்கள் எந்தமதத்தைச்சார்ந்தவர்களோ அந்தமதத்தின்சார்பாகத்தான் மொழிபெயர்ப்பு அமைகிறது. இதனை, பகவத்கீதையில்மாத்திரமேயன்றி மற்றப்பருவங்களிலும் வேதாந்தப்பகுதிகள் வருமிடந்தோறும் காணலாம். இந்தமாதிரியானவிடங்களில் தங்கள்மதக்கொள்கைகளுக்கு முரணாயிருப்பதாகநினைப்பவர்கள் தங்கள்தங்கள் சமயநூல்களில்வல்லபண்டிதர்களிடம் கேட்டுத்தெளிந்துகொள்க.

இந்தப்பருவத்தில் ஆயுதப்பெயர்களும் வாத்தியப்பெயர்களும் பல வந்துள்ளன. அவைகளுள் சிலவற்றிற்குத் தமிழ்ப்பெயர் கிடைக்காமையாலும் சிலவற்றுக்கு ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாகப் பொருள்கூறுதலாலும் அவற்றையும் மற்றமுன்னையுத்தபர்வங்களில் காணப்படும் அவ்விதச்சொற்களையும் தொகுத்துப்பொருளெழுதி அகராதியாக அச்சிட நினைத்திருக்கிறேன்.

இனி மற்றப்பர்வங்களையும் அச்சிட்டுவெளியிடுவதற்கான வல்லாவிதஆற்றலையும் எனக்கு அளித்தருளும்படி எல்லாம்வல்ல ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் :

ம. வீ. இராமானுஜாசாரியன்.

Printed at the
**Ganesa Press, Madras.**
**(First 18 Formes at the Vaijayanthi Press, Madras.)**